ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேசிய சங்வர்த்தனை வங்கி
Pradeshiya Sanwardhana Bank

வேலை வாய்ப்புகள்

நாடு முழுவதும் 272 கிளைகளைக் கொண்ட இலங்கையின் முதன்மையான அரச அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்காகத் தகுதியான, நிபுணத்துவம் வாய்ந்த, சுறுசுறுப்பான மற்றும் ஊக்கமுள்ள இலக்குகளைக் கொண்ட இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முகாமைத்துவப் பயிலுநர்கள் (Management Trainees)

தகுதி அளவுகோல்கள்

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (*UGC*) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து, கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு பாடத்தில்/ துறையில் **வகுப்புச் சித்தியுடன்** கூடிய பட்டத்தைப் பெற்றிருத்தல்:
   வங்கியியல் மற்றும் நிதி, முகாமைத்துவம் (அரச/ வணிக நிர்வாகம்), கணக்கியல், வணிகவியல், பொருளியல், விவசாயம், மனித வள முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், கணினி அறிவியல், பொறியியல், அறிவியல், கணிதம், சந்தைப்படுத்தல், சட்டம், புள்ளிவிபரவியல் அல்லது சொத்து மதிப்பீடு.
   அல்லது
   மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு பாடத் துறையில் சாதாரண சித்தியுடன் கூடிய பட்டமும், இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்திடமிருந்து (*IBSL*) வங்கி மற்றும் நிதி தொடர்பான டிப்ளோமா (*DBF* - பழைய பாடத்திட்டம்) அல்லது வர்த்தக வங்கியியல் மற்றும் நிதி தொடர்பான டிப்ளோமா (*DABF*) அல்லது வங்கி மற்றும் நிதி தொடர்பான உயர்தர டிப்ளோமா (*HDBF*) அல்லது இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் *(ICA Sri Lanka) Corporate Level* பூர்த்தி செய்திருத்தல்.
   அல்லது
   இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் (*IBSL*) இணை உறுப்பினராக (*Associate Membership*) இருத்தல் அல்லது இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (*ICA - Sri Lanka*), ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவக் கணக்காளர்களின் பட்டய நிறுவனத்தின் (*CIMA-UK*), ஐக்கிய இராச்சியத்தின் பட்டயச் சான்றளிக்கப்பட்ட கணக்காளர்களின் சங்கத்தின் (*ACCA-UK*), *CFA* நிறுவனத்தின் நிதிப் பகுப்பாய்வாளர் திட்டத்தின் (*CFA-USA*), இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (*CMA Sri Lanka*), ஐக்கிய இராச்சியத்தின் பட்டயச் சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் (*CIM-UK*), இங்கிலாந்து மற்றும் வேல்ஸின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (*ICA-EW*) இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல்.
3. கணினி அல்லது தகவல் தொழில்நுட்ப அறிவும், இரண்டாவது மொழியில் செயற்படும் திறனும் கொண்ட விண்ணப்பதாரர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.
4. சமூக அடிப்படை நடவடிக்கைகள் தொடர்பாகத் தெளிவான புரிதலைக் கொண்டவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.
5. வயது: 28 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும் (விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு).

தெரிவு செய்யும் முறை

- விண்ணப்பதாரர்களின் அறிவைப் பரிசோதிப்பதற்காகக் நேரடி மேற்பார்வையின் கீழ் எழுத்துப் போட்டிப் பரீட்சையொன்று நடத்தப்படுவதுடன், அதன் பின்னர் பிரதேச அபிவிருத்தி வங்கியினால் (*RDB*) நேர்முகப் பரீட்சையொன்று நடத்தப்படும்.
- வங்கிக்காக இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் *(IBSL)* கண்காணிப்பின் கீழ் நடத்தப்படும், நேரடி மேற்பார்வையின் கீழான எழுத்துப் போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் இத்தெரிவு மேற்கொள்ளப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் வங்கியினால் நடத்தப்படும் நேர்முகத் தேர்விற்காக சிறு பட்டியலிடப்படுவார்கள் (*Shortlisted*) அத்துடன், இறுதித் தெரிவு குறித்த நேர்முகத் தேர்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.
- கீழே குறிப்பிடப்பட்டுள்ள வினாத்தாள்கள் மற்றும் பாடங்களைக் கொண்ட இந்த நேரடி மேற்பார்வையின் கீழ் நடத்தப்படும் எழுத்துப் போட்டிப் பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடத்தப்படும்.
- விண்ணப்பதாரர்கள் 01 மற்றும் 02 ஆம் வினாத்தாள்களுக்காக ஒரேயொரு மொழி மூலத்தை மட்டுமே தெரிவு செய்ய முடியும் அத்துடன், மொழி மூலமொன்றைத் தெரிவு செய்த பின்னர் எந்தவொரு காரணத்திற்காகவும் அதனை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

#	பாடம்	மொழி	நேரம்	புள்ளிகள்
01ஆம் வினாத்தாள்	பகுப்பாய்வுத் திறன் மற்றும் நுண்ணறிவுப் பரிசோதனை (**MCQ**)	தமிழ்/ சிங்களம்/ ஆங்கிலம்	01 மணித்தியாலம்	100
02ஆம் வினாத்தாள்	பொது அறிவு (**MCQ**)	தமிழ்/ சிங்களம்/ ஆங்கிலம்	01 மணித்தியாலம்	100
03ஆம் வினாத்தாள்	ஆங்கில மொழி	ஆங்கிலம்	01 மணித்தியாலம்	100
	மொத்தம்			300

- நேரடி மேற்பார்வையின் கீழ் நடத்தப்படும் இந்த எழுத்துப் போட்டிப் பரீட்சையானது **கொழும்பில்** அமைந்துள்ள பரீட்சை நிலையங்களில் மட்டுமே நடத்தப்படும்.
- விண்ணப்பங்கள் கையேற்கப்படும் இறுதித் திகதிக்கு வங்கியினால் தீர்மானிக்கப்படும் குறைந்தபட்சத் தகுதிகள் மற்றும் அளவுகோல்களை விண்ணப்பதாரர் ஒருவர் பூர்த்தி செய்திருக்காவிட்டால் அல்லது போலியான /தவறான தகவல்களைச் சமர்ப்பித்திருந்தால், அவர் பரீட்சையில் சித்தியடைந்திருந்த போதிலும் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் எந்தவொரு கட்டத்திலும் மேலதிக அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படுவார்.
- நேர்முகத் தேர்வுக் கட்டத்தில் பிரதேச அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்படும் சான்றிதழ் / தகுதி சரிபார்ப்புச் செயன்முறையின் போது மேலே குறிப்பிட்ட தேவையான தகுதிகளை உறுதிப்படுத்துவதற்கான ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிக்க ஏதேனும் விண்ணப்பதாரர் தவறினால், அவரது விண்ணப்பம் உடனடியாக நிராகரிக்கப்படும்.
- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் வங்கியின் தேவைகளுக்கு ஏற்ப நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்ற விருப்பத்துடன் இருத்தல் வேண்டும். சேவை ஸ்தலம் தீர்மானிக்கப்படுவது வங்கி முகாமைத்துவத்தின் விருப்பத்திற்கு ஏற்பத் தீர்மானிக்கப்படும்.
- போட்டிப் பரீட்சையிலிருந்து பெறப்படும் புள்ளிகள் நேர்முகப் பரீட்சைகளுக்காக விண்ணப்பதாரர்களைக் குறுகிய பட்டியலிடுவதற்கு (*Shortlisted*) மட்டுமே பயன்படுத்தப்படும். இறுதித் தெரிவு நேர்முகத் தேர்வில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்படும்.
- இறுதித் தெரிவு அடையாளம் காணப்பட்ட வெற்றிடங்களின் அடிப்படையில் திறமை வரிசைக்கிரமத்திற்கு ஏற்ப அமையும்.

பயிற்சிக் காலம் மற்றும் நியமனம் வழங்குதல்

- பயிற்சிக் காலம் 02 வருடங்கள் ஆகுவதுடன், முதலாம் வருடத்திற்காக நிலையான மாதாந்தக் கொடுப்பனவாக ரூ. 90,000/- உம், இரண்டாம் வருடத்திற்காக ரூ. 100,000/- உம் வழங்கப்படும்.
- பயிற்சிக் காலத்தினுள் அரை வருட மதிப்பீடுகள் நடத்தப்படும். வங்கியின் திருப்திக்கு ஏற்ப பயிற்சியின் தேவைகளைப் பூர்த்தி செய்த பின்னர், நிரந்தர ஊழியர் குழாமின் அதிகாரி - *IV* தரத்திற்கு நியமிக்கப்படுவதுடன், மாதத்திற்கு ரூ. 881,115 - 930 x 3 - 83,905/- என்ற சம்பள அளவுகோலின் ஆரம்பச் சம்பளக் கட்டத்தில் நிலைநிறுத்தப்படுவார். இதற்கு மேலதிகமாக, வங்கியிலிருந்து கிடைக்கும் ஏனைய சலுகைகளும் வழங்கப்படும் (மாதாந்த மொத்தச் சம்பளம் சுமார் ரூ. 180,000/- ஆக இருக்கும்).
- சேவையை நிரந்தரமாக்குவது ஓராண்டு தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது (அது இரண்டு வருடப் பயிற்சிக் காலத்தின் பின்னர் கணக்கிடப்படும்) அத்துடன், தகுதிகாண் காலத்திற்குள் செயற்றிறன் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும்.

விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதி

2026 டிசம்பர் 20

விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல்

- தொடர்புடைய விண்ணப்ப இணைப்பு ***www.rdb.lk*** இணையத்தளத்தின் ***"Career"*** பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது. *"Apply"* பொத்தானைத் தெரிவு செய்த பின்னர், விண்ணப்பதாரர்கள் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தினால் (*IBSL*) வசதியேற்படுத்திக் கொடுக்கப்படும் **பிரதேச அபிவிருத்தி வங்கிக்கான முகாமைத்துவப் பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்தல் - *2026/27*** க்கான நிகழ்நிலை (*Online*) விண்ணப்பத்திற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.
- விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக நிகழ்நிலையினூடாக (*Online*) மட்டுமே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலையினூடாக விண்ணப்பிக்கும் செயன்முறை **2026 நவம்பர் மாதம் 30ஆம் திகதி** ஆரம்பிக்கப்படுவதுடன், **2026 டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி 23:59** மணியுடன் அது முடிவடையும்.
- விண்ணப்பதாரர் விண்ணப்பப் படிவத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் அடையாள அட்டை இலக்கங்களில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். குறிப்பிட்ட அந்த இலக்கத்திற்குரிய அடையாள அட்டையை, உறுதிப்படுத்தலுக்காகப் பரீட்சை நிலையத்திற்கும் சமர்ப்பிக்க வேண்டும்.
  *I.*தேசிய அடையாள அட்டை (*National Identity Card*) அல்லது
  *II.*செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச் சீட்டு (*Valid Passport*)
  நிகழ்நிலை பரீட்சை விண்ணப்பப் படிவமானது ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். நிகழ்நிலை விண்ணப்பப் படிவம் வெற்றிகரமாகச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்திற்கு (*IBSL*) வழங்கப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரி ஊடாக விண்ணப்பம் கிடைத்தமை குறித்து விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படும்.
- இந்த நிகழ்நிலை செயன்முறையைத் தவிர வேறு எந்தவொரு முறையின் ஊடாகவும் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எந்தவொரு காரணத்திற்காகவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் (*IBSL*) ***www.ibsl.lk*** இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து விண்ணப்பப் படிவத்தை நிரப்புவது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும்.
- *IBSL* இன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் செயன்முறைக்கு இணங்காத எந்தவொரு விண்ணப்பமும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் கட்டத்திலேயே தானியங்கி ரீதியாக நிராகரிக்கப்படும்.

பரீட்சைக் கட்டணம் செலுத்துதல்

மீளச் செலுத்தப்படாத பரீட்சைக் கட்டணம் விண்ணப்பதாரர் ஒருவருக்கு **ரூ. 3,000/-** ஆகும். அத்துடன், *RDB* வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய இக்கட்டணம் விண்ணப்பச் செயன்முறையின் ஊடாக நிகழ்நிலை மூலமாக அறவிடப்படும்.
நிகழ்நிலை வழியாகப் பணம் செலுத்தும் வசதி செயற்படுத்தப்பட்ட ஏளைய */ Mastercard / UnionPay* பற்று *(Debit)* அல்லது கடனட்டைகளை மட்டுமே பயன்படுத்தி **ரூ. 3,000/-** பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

ஏனைய விதிகளும் நிபந்தனைகளும்

- பரீட்சையை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக விண்ணப்பதாரர்கள் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு உட்படுவார்கள்.
- தமிழ், சிங்களம் அல்லது ஆங்கில மொழி மூலத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள இந்த அறிவித்தலின் மொழிப் பிரதிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது பொருத்தமின்மை இருப்பதாகத் தென்பட்டால், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள பிரதிக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.
- அனைத்து விண்ணப்பங்களும் மிகக் கடுமையான இரகசியத் தன்மையுடன் கருதப்படும் அத்துடன், எந்தவொரு வகையிலும் அழுத்தம் கொடுத்தல் தகுதியீனமாகக் கருதப்படும்.
- குறுகிய பட்டியலிடப்பட்ட (*Shortlisted*) விண்ணப்பதாரர்களை மட்டுமே நேர்முகத் தேர்வுகளுக்காக அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.
- ஆட்சேர்ப்புச் செயன்முறையின் எந்தவொரு கட்டத்திலும், வெற்றிடங்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல், ஆட்சேர்ப்புக்களை பிற்போடுதல் அல்லது இரத்துச் செய்தல் போன்றவற்றுடன் அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏனைய தகவல்களின் அடிப்படையில் மேலதிக அறிவித்தல் இன்றித் தீர்மானிக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.
- தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு ஏற்ப, வங்கியும் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனமும் (*IBSL*) விண்ணப்பதாரர்களின் தகவல்களின் தனிப்பட்ட தன்மையையும் இரகசியத் தன்மையையும் பாதுகாக்கும்.

பிரதான மனித வள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி
இல. 933, கண்டி வீதி
வெதமுல்லை
களனி
011-2035454

011 203 54 54
www.rdb.lk